[9th November 1965

திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்: மதுரை மாவட்ட கலெக்டர் அவர்களால் ஓராயிரம் கிணறுகள் வெட்ட ஆறுமாதத்திற்கு முன் பாக அனுப்பிய ஸ்கிம் மறுபடியும் அனுப்பப்பட்டால், அதை சர்க்கார் ஆலோசிக்குமா ?

MR. SPEAKER : It is a hypothetical question.

கனம் திரு. பூ. கக்கன் : அவசியமான வட்டங்களில் கிணறு வெட்ட ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆயிரம் கிணறுகள் வெட்ட வேண்டும் என்பதற்கு இடம் இல்லை என்று நினைக்கிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி : பத்தாயிரம் கிணறுகள் தமிழகத்திலே வெட்டப் போவதாக இருக்கிறதே, அவை மாவட்ட வாரியாக வெட்டப்படுமா அல்லது குறித்த மாவட்டங்களிலே வெட்டப்படுமா ? அதை எப்படி அமல் நடத்தப் போகிறீர்கள் ?

கனம் திரு. பூ. கக்கன் : எங்கெல்லாம் உணவு உற்பத்தி செய்யப் படுமோ, அங்கெல்லாம் வெட்டப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, இந்தக் கிணறுகள் வெட்ட ரூ. 2,000 அதிகபட்சம் என்று இருந்தது ஆனால், சில இடங்களில் 10,000 ரூபாய், 20,000 ரூபாய் வரை கூட ஒரு கிணறுக்கு எஸ்டிமேட் ஆகிறது. அந்த வகையில் கடன் கொடுத்து உதவ சர்க்கார் முன்வருவார்களா என்று அறியவிரும்பு கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அதிக பட்சம் ரூ. 2,000 என்பது இப்பொழுது குறைந்த பட்சமாகப் போய்விட்டது. இப்பொழுது ரூ. 5,000 கொடுக்கப்படுகிறது.

பனையூர் கால்வாய்

*373 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) மதுரை தாலூகா பனையூர் கண்மாய் கால்வாயை மராமத்து செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம், இதற்காக அரசாங்கம் ரூபாய் இரண்டு லட்சத்து பத்தாயிரம் மதிப்பீட்டுச் செலவுக்கு அனுமதியளித்துள்ளது.

(இ) இத்திட்டத்தின்கீழ் வைகை ஆற்றுப் பக்கத்தில் நீரைத் தடுத்து நிறுத்தும் கற்சுவர் ஒன்று எழுப்பப்படும். அது பனையூர் கால்வாயின் ஆரம்பப் பகுதியை, மதுரை டவுனில் நகராட்சி எல்லைக்குள் உள்ள வைகை ஆற்றிற்குக் குறுக்கேயுள்ள பாலத்துடன் இணைக்கும். இதன்மூலம் பாலத்தின் முதல் கண்மாயின் மூலம் நீர் திருப்பிவிடப்படும். மேற்படி மதிப்பீட்டுச் செலவில், கரையை உறுதிப்படுத்தல், சேதமுற்றிருக்கும் தடுப்புச் சுவர்களைச் செப்பனிடுதல், தூர்வாருதல் முதலியவற்றிற்கும் தொகை ஒதுக் கப்பட்டுள்ளது.

9th November 1965]

திரு. கரு. சீமைச்சாமி : சார், இந்த வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்று அறியமுடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : The Chief Engineer for Irrigation has since reported that the work at an estimated cost of Rs. 2,31,000 has been technically sanctioned by him in respect of the scheme. சாங்ஷன் செய்து இருப்பதால் அதி சீக்கிரமே வேலை துவக்கப்படும்.

ஆலக்கிராமம் ஏரி

*374 **கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டத்திலுள்ள ஆலக்கிராமம் ஏரியை ஆழப்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இத்தகையதொரு திட்டத்தை வருவாய்த்துறை வாரியத்தை (உணவு உற்பத்தி பிரிவை) கலந்து அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

(இ) இத்திட்டம் பற்றி இறுதி முடிவு எதுவும் இன்னும் மேற்கொள்ளப்படாததால், இத் திட்ட வேலையைத் தொடங்குவது பற்றிய கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, உணவு உற்பத்தி பெருக வேண்டும் என்பதில் கவனம் செலுத்தி வருகிறோம். ஆனால், ஆழப்படுத்தும் திட்டம் தாமதமாகிக்கொண்டு இருக்கிறது. இந்த ஏரி மூன்று ஆண்டுகளாக தாமதப்படுத்தப் பட்டு வருகிறது. ஆகையினால் உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே திட்டம் போட்டு இருக்கிறார்கள். ஆயக்கட்டுதார்கள் பெட்டர் மென்ட் டாக்ஸ் கொஞ்சம் பெறவேண்டியிருப்பதால் அவர்கள் ஒத்துக்கொள்வார்களா என்று யோசித்துக்கொண்டிருக்கிறது.

Dam across East river.

*375 Q.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Home be pleased to state :

(a) whether there is any proposal to construct a dam across the Khizakku Aru in Omalur taluk; and

(b) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.